கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de


Online Newspaper in Tamil Vol.10 27.08.2012

தேனீ 10 ஆண்டுகள் 22.02.2002 22.02.2011

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
திருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஹீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (63)

63. திருநெல்வேலியில் இராணுவத்தினருடன் கூடவே தாக்குதலுக்குள்ளாகி இறந்த செல்லக்கிளி!




1983 ஜூலை 23ம் திகதி திருநெல்வேலியில் இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தி அவர்களில் 13 பேரைக் கொலை செய்த அன்று இரவு, சம்பவம் நடந்த இடத்துக்கு மிக அருகாமையில் நான் வாடகைக்குக் குடியிருந்த வீட்டில் நானும் சில தோழர்களும் தங்கியிருந்தோம். அந்த வீடு பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் பரமேஸ்வராச் சந்தியிலிருந்து சிவன் கோவில் செல்லும் வீதியில் தபால் கந்தோருக்கு முன்னால் அமைந்துள்ளது. புலிகள் கண்ணிவெடி மூலம் இராணுவத்தைத் தாக்கிய பின்னர் இரு தரப்பும் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டபோது, துப்பாக்கிக் குண்டுகள் பறந்துவந்து நாம் தங்கியிருந்த வீட்டின் மீதும் படபடவென விழுந்தன. அன்றிரவு நாம் யாரும் நிம்மதியாகத் தூங்கவில்லை.

அடுத்த நாள் காலை நானும் சில தோழர்களும் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்றபோது பெரும் தொகையான மக்கள் அவ்விடத்தில் குழுமி இருந்தனர். குண்டுவெடிப்பாலும் துப்பாக்கிச் சூடுகளாலும் அயல் வீடுகள் சில சேதமடைந்திருந்தன. புலிகள் அயலிலிருந்த வீடுகளின் மதில்களுக்குப் பின்னால் மறைந்திருந்து கண்ணி வெடியை வெடிக்க வைத்துவிட்டு, பின்னர் துப்பாக்கியால் இராணுவத்தினர் மீது சுட்டதாக அயல் வீடுகளில் குடியிருந்த மக்கள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதல் நடந்த இடம் பல்கலைக்கழகச் சந்தியிலிருந்து திருநெல்வேலிச் சந்திப்பக்கமாக உள்ள 'தபால்பெட்டி' சந்தியாகும். அந்தச் சந்தியில் மேற்குப்புறமாக ஒரெயொரு கடை மட்டும் இருக்கிறது. அதன் மேல்புறம் சீமெந்து பிளாட்டினால் ஆனது. இராணுவத்தின் மீதான தாக்குதலின்போது, புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான 'செல்லக்கிளி' இந்தக்கடையின் மேல்தளத்தில் நின்றுதான் தாக்குதலில் ஈடுபட்டார். பிரபாகரன் அவருக்கு எதிர்ப்புறமாக வீதிக்கு அந்தப்பக்கம் இருந்த ஒரு வீட்டின் மதிலின் பின்னால் சிலருடன் மறைந்திருந்து தாக்குதலில் ஈடுபட்டார்.

தாக்குதலின் உச்சக்கட்டத்தில் திடீரென செல்லக்கிளி மீது சரமாரியான துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டு, அவர் அந்த இடத்திலேயே சரிந்து விழுந்து இறந்துவிட்டார். அந்த மர்மமான சூட்டை செல்லக்கிளி மீது நடாத்தியவர் பிரபாகரன் தான் என்ற விடயம், பிற்காலத்தில் பரவலாக எங்கும் பேசப்பட்டது. அவ்வளவு உறுதியாக பிரபாகரன் மீது குற்றம் சாட்டப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

ஒன்று, பிரபாகரன் செல்லக்கிளியைச் சுட்டதை அவருடன் கூட இருந்த சிலர் கண்டதாகச் சொல்லப்பட்டது.

இரண்டாவது, செல்லக்கிளி மீது பிரபாகரனுக்கு எப்பொழுதுமே ஒர் அச்சம் இருந்து வந்ததாகத் தெரிகிறது. அதற்குக் காரணம் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த செல்லக்கிளி அந்தச் சமூகத்துக்குப் பொதுவாக உள்ள போர்க்குணம் மிக்கவர். புலிகள் இயக்கத்தில் அஞ்சாமையுடன் வீரதீரமாகச் செயல்பட்ட ஒருவராகவும், பிரபாகரனைவிட உயரமானவராகவும், ஆளுமை மிக்கவராகவும் அவர் இருந்தார். இயக்கத்தில் எல்லாவிடயங்களிலும் தன்னையே முதன்மைப்படுத்துபவராக இருந்த பிரபாகரனுக்கு செல்லக்கிளியின் வளர்ச்சி பிடித்திருக்க நியாயமில்லை. எனவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரைத் தீர்த்துக்கட்டிவிட்டதாக செய்திகள் உலாவின.




இந்த விடயம் உண்மைதானா என்பதை என்னால் உறுதியாகச் சொல்வதற்கு என்னிடம் ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஆனால் சந்தேகப்படுவதற்குப் பல காரணிகள் உள்ளன. இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது புலிகளுக்குப் பின்னணியிலிருந்து உதவுவதற்காக யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் சென்றிருந்தனர். (இப்பொழுது அவர்கள் மூவரும் வெள;வேறு வெளிநாடுகளில் வாழ்வதாகத் தகவல்) அவர்கள் மூவரும் எனக்கு நன்கு பழக்கமானவர்கள். அவர்களிடம் பிரபாகரன் செல்லக்கிளியைச் சுட்டது உண்மைதானா என்பதை அறியப் பல தடவைகள் முயன்றேன். நான் அந்த விடயத்தை அவர்களிடம் நேரடியாகக் கேட்காதபோதும், விடயத்தை அவர்கள் புரிந்துகொண்டு பதில் ஏதும் கூறாமல் தட்டிக்கழித்துவிட்டார்கள்.

செல்லக்கிளியின் அண்ணன் ஒருவரை எனக்குத் தெரியும். திருமணம் செய்து கொள்ளாத அவர், மேசன் வேலை செய்து வந்தார். அவர் வேலை முடிந்து வந்து இரவில் நல்லூர் பண்டாரக்குளம் ஒழுங்கையிலுள்ள எனது நெருங்கிய உறவினர் ஒருவரின் வீட்டில்தான் படுப்பது வழமை. நான் அங்கு செல்லும் நேரங்களில் அவருடன் கதைத்துப் பழகியதால், செல்லக்கிளியின் மரணம் குறித்து அவரிடமும் ஒருமுறை கேட்டேன். அவர் பிரபாகரனை நேரடியாகக் குற்றம் சாட்டாமல், இயக்கத்தில் அவரது வளர்ச்சி பிடிக்காத உயர் சாதியைச் சேர்ந்தவர்கள் சிலர் அவரைத் திட்டமிட்டுச் சுட்டுக் கொன்றதாகத் தான் கேள்விப்பட்டதாகச் சொன்னார்.

இது ஒருபுறமிருக்க பிரபாகரனின் சொந்தக் குணாம்சங்கள் பற்றி முன்னரும் நான் சில சம்பவங்கள் கேள்விப்பட்டிருந்தேன். ஆரம்ப காலத்தில் பிரபாகரனும் அவருடைய சகாக்கள் சிலரும் ஒரு இடத்தில் மறைவாக இரவு படுத்திருந்திருக்கின்றனர். நள்ளிரவில் எழுந்த பிரபாகரன் தன்னுடன் படுத்திருந்தவர்களில் தனக்குப் பிடிக்காத ஒருவரைத் தயவு தாட்சண்யமின்றி சுட்டுக் கொன்றிருக்கிறார். இந்தச் சம்பவம் பரவலாகப் பேசப்பட்ட ஒரு விடயம்.

பிரபாகரனும் குட்டிமணியும் சேர்ந்து நீர்வேலி வங்கிக் கொள்ளையைச் செய்த நேரமும் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. கொள்ளையின் பின்னர் கொள்ளையடித்த நகைகள், பணம் என்பனவற்றுடன் பிரபாகரன், குட்டிமணி போன்றோர் ஒர் இடத்தில் இரவு தங்கி இருந்திருக்கின்றனர். எல்லோரும் படுத்துத் தூங்கிய பின்னரும் பிரபாகரன் மட்டும் தூங்காமல் அவர்கள் தங்கியிருந்த கொட்டிலைச் சற்றிச்சுற்றி வந்திருக்கிறார்.

இதை அவதானித்த குட்டிமணி "தம்பி (பிரபாகரனை சிறுவயதில் ஊரிலுள்ளவர்கள் தம்பி என்று அழைப்பது போலவே, புலிகள் இயக்கத்திலும் ஆரம்ப காலத்தில் அன்ரன் பாலசிங்கம் முதற்கொண்டு எல்லோரும் 'தம்பி' என்று அழைப்பதே வழமையாக இருந்தது. பின்னர் அவர் 'தலைவர்' ஆனதும் 'தம்பி' என அழைத்தால் தண்டனைதான் கிடைக்கும்) நீ இன்னும் படுக்கல்லையா?" எனக் கேட்டிருக்கிறார்.

அதற்கு பிரபாகரன், "எல்லாரும் படுத்தால் இந்தப் பொருட்களைப் பாதுகாப்பது ஆர்?" எனக் கேட்டிருக்கிறார்.

பிரகாகரனின் இந்த எதிர்க் கேள்வி குட்டிமணியின் சிந்தனைப் பொறியைத் தட்டிவிட்டிருக்கிறது. பிரபாகரன் நள்ளிரவில் தனது சகாவையே சுட்டுக்கொன்றதை அறிந்திருந்த குட்டிமணி, பின்னர் அன்றிரவு தானும் தூங்கவில்லை. தங்கள்



Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

BBC
Newsnow

எல்லோரையும் சுட்டுக்கொன்றுவிட்டு, கொள்ளையடித்த நகைகளையும் பணத்தையும் பிரபாகரன் எடுத்துச் சென்றுவிட்டால் என்ன செய்வது என்ற அச்சமே, குட்டிமணியையும் அன்றிரவு தூங்காமல் செய்துவிட்டது. எனக்கு இந்த விபரத்தைச் சொன்னவர் குட்டிமணியின் நெருங்கிய சகா ஒருவரின் நண்பராக இருந்தவர்.

ஆனால் குட்டிமணி அன்று இரவு சந்தேகித்தது சரியாகப் போய்விட்டது. அந்த நீர்வேலி வங்கிக் கொள்ளையில் கிடைத்த பணம், நகைகள் என்பனவற்றைப் பிரபாகரனும் குட்டிமணியும் சில வாரங்களில் பாகப்பிரிவினை செய்தனர். பின்னர், அவற்றை எடுத்துக்கொண்டு இந்தியா செல்வதற்காக குட்டிமணி வல்லிபுரக் கோவிலுக்கு அருகிலுள்ள கடற்கரையிலிருந்து பயணம் மேற்கொண்டபோது, இலங்கைக் கடற்படையால் துரத்தப்பட்டு, திரும்பி அவர் கரைக்கு ஓடியபோது அங்கு பதுங்கியிருந்த பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் வெலிக்கடைச் சிறையில் குட்டிமணி தடுத்து வைக்கப்பட்ட நிலையில், பிரபாகரன் குழுவினர் திருநெல்வேலியில் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலின் எதிர்விளைவாக, அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசின் அனுசரணையுடன் சிங்களச் சிறைக் கைதிகளால் அவரும், தங்கத்துரை போன்ற போன்றவர்கள் உட்பட 53 கைதிகளும் சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட விடயம் எல்லோரும் அறிவர்.



குட்டிமணி இந்தியா செல்லும் விடயம் மிக இரகசியமாக இருந்தும், பொலிசாருக்கு எப்படி அந்த விடயம் தெரிந்தது என்பது எல்லோருக்கும் அந்த நேரத்தில் வியப்பாக இருந்தது. ஆனால் சிறிது காலத்தின் பின்னா உண்மை வெளியான போது எல்லோருக்கும் அதிர்ச்சியாகப் போய்விட்டது. அந்த நேரத்தில் வல்லிபுரம் பகுதியில் கிராமசேவை அலுவலராக இருந்த கோவளத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்த தகவலின்படி, பிரபாகரன் குழுவினரே குட்டிமணியின் பயணம் பற்றி பொலிசாருக்குத் தகவல் சொன்னதாகத் தெரிய வந்தது!

எனவே இத்தகைய 'பண்புகள்' நிறைந்த ஒருவர் தனது சகா செல்லக்கிளியை தானே வேட்டையாடி இருப்பார் எனப் பலரும் கருதியதில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது.

புலிகள் இராணுவத்தினரைத் தாக்கிய மறுநாள், நண்பகல் அளவில் பலாலியிலிருந்து திருநெல்வேலிச் சந்தியில் வந்திறங்கிய பெருமளவு இராணுவத்தினர் பலாலி வீதியூடாகவும், அந்த வீதிக்குக் கிழக்கே இருந்த தாளையடி ஒழுங்கைக்கூடாகவும் நடந்து வந்து கண்ணில் பட்ட எல்லோரையும் சுட்டுக் கொன்றனர்.

நான் இருந்த வீட்டுக்கு மேற்குப்புறமாக இருந்த ஒழுங்கையினாலும் சில இராணுவத்தினர் துப்பாக்கிகளை நீட்டிய வண்ணம் வந்து கொண்டிருந்தனர். நாம் அவர்களை மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தோம். எமது வீட்டுக்கு மேற்குப்புறமாக ஒழுங்கைக்கு அப்பால் 'ஆனந்தண்ணை' என்ற றேடியோ திருத்துபவர் ஒருவருடைய வீடு இருந்தது. மதிய நேரமாகையால் (அன்று ஞாயிற்றுக்கிழமை என்று ஞாபகம்) அந்த ஆனந்தண்ணை வீட்டின் வாசல்படியில் இருந்த சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இராணுவத்தினர் அவரது வீட்டுக் கேற்றடியில் நின்று கொண்டு அவரை அழைத்ததை நாம் பார்த்துக் கொண்டிருந்தோம்.

ஆனந்தண்ணை சோற்றுக் கோப்பையை கையில் ஏந்திய வண்ணம் கேற்றை நோக்கி வந்தார். அவர் பாதித்தூரம் வந்திருக்கமாட்டார். இராணுவத்தினர் அவரை நோக்கிச் சுட்டுவிட்டு சர்வசாதாரணமாக அப்பால் நகர்ந்து சென்றனர். அவர் அந்த இடத்திலேயே விழுந்து துடிதுடிக்க இறந்துவிட்டார். நாம் அதிர்ச்சியில் உறைந்து போனோம். இராணுவத்தினர் தற்செயலாக இந்தப்பக்கம் திரும்பியிருந்தால், எம்மையும் கண்டிருப்பர். அப்படிக் கண்டிருந்தால் எமது கதியும் ஆனந்தண்ணையின் கதியாகத்தான் போயிருக்கும்.

பின்னர் இராணுவத்தினர் சிவன் கோவிலின் மேற்கு வீதியால் சென்று மணல்தறை ஒழுங்கைக்கூடாக பழம் வீதிக்குச் சென்று கண்ணில் காண்பவர்களைச் சுட்டபடி சென்றிருக்கின்றனர். பலாலி வீதியால் சென்ற இராணுவத்தினரும் பலரைச் சுட்டவண்ணம் சென்றிருக்கின்றனர். அவ்வாறு சுடப்பட்டவர்களில் அரச அதிகாரியான நன்கு பிரபலமான கலா பரமேஸ்வரனும் அவரது மாமனாரும் அடங்குவர்.

பழம் வீதியால் சென்ற இராணுவத்தினர் அரசடி வீதியைக் கடந்து கந்தப்புராண வீதியால் சென்றிருக்கின்றனர். அவர்கள் அவ்வாறு சுட்டுக்கொண்டு சென்றதை பழம் வீதி - அரசடி வீதி சந்திப்பில் குடியிருந்த நில அளவையாளர் என்.தேவராஜன் (இவர் இன்று யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகளுக்காகவும், சமூகத்தில் நீதியை நிலை நாட்டுவதற்காகவும் செயற்பட்டு வரும் சட்டத்தரணி றெங்கன் அவர்களின் தந்தையார்) பூட்டிய தனது வீட்டு கதவுக்கு மேல் இருந்த கிறில் கல்லுக்கூடாக நேரடியாக அவதானித்த வண்ணம் இருந்திருக்கிறார். இந்தச் சம்பவத்தை அவரே என்னிடம் பின்னர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நடந்த நாட்களில் 'மண் சுமந்த மேனியர்' நாடக 'அண்ணாவியார்' (நெறியாளர்) க.சிதம்பரநாதன் தனது துணைவியார் பத்மினியுடன் கந்தப்புராண வீதியில் தெரிந்தவர் ஒருவர் வீட்டின் அறையொன்றில் குடியிருந்து கொண்டிருந்தார். (பத்மினியின் பிறந்தகம் பழம் வீதியில் இருந்தது. ஆரம்பத்தில் அங்குதான் குடியிருந்தனர்) இராணுவம் தமது ஒழுங்கையால் வருவதைக் கண்ட சிதம்பரநாதன் அச்சத்தால் ஓடிச்சென்று மலசல கூடத்துக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக்கொண்டு நின்று கொண்டார்.

ஆனால் இதைக் கண்டுவிட்ட இராணுவ வீரன் ஒருவன், துப்பாக்கியை நீட்டிய வண்ணம் அந்த மலசல கூடத்தின் வாசலுக்குச் சென்று நின்றுகொண்டு கதவைத் திறக்கும்படி கூச்சலிட்டான்.

தொடரும்

முன்னைய பதிவுகள்